செய்தி வெளியீடு எண்: 203 நாள்: 22.03.2018

## செய்தி வெளியீடு

## கவிச்சக்கரவர்த்தி கம்பர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தல் 24.03.2018

அறவிலக்கியங்களில் ஆன்மிக உணர்வினைத் தேக்கும் பல இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பட்டாலும் கவிச் சக்கரவர்த்தி, காவியப் பேரரசு புலவர் கம்பர் பெருமானால் படைக்கப்பட்ட 'கம்பராமாயணமே' காலத்தால் இளமையோடு இலக்கியத் தலைமையோடு இன்றும் வாழ்கிறது... வளர்கிறது.

''கல்வியில் சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு''

என்கிறார் மகாகவி பாரதியார். மேலும்,

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை''

என உறுதிபடயுரைக்கின்றார்.

கவிச்சக்கரவர்த்தியின் ''கம்ப ராமாயணத்தைக்'' கவியரசு கண்ணதாசன் அவர்கள்

''பத்தாயிரம் கவிதை
முத்தாக அள்ளிவைத்த
சத்தான கம்பனுக்கு ஈடு – இன்னும்
வித்தாகவில்லை என்று பாடு...''

என்று அவரது காவியத்தின் கவிநயத்தை, தனித்துவத்தைப் போற்றுகிறார்.

மேலும்,

காலமென்னும் ஆழியிலும்
காற்றுமழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு – அது
தலைமுறைக்கு எழுதிவைத்த சீட்டு .... எனவும் புகழ்கிறார்.

காலந்தோறும், இளந்தலைமுறையினருக்குக் கம்பராமாயணம் காளமேகமாகவும், காமதேனுவாகவும் தமிழ் ஊற்றி வாழும் என்பதால், தமிழ்த்தாயின் ஆயிரம் கால அருந்தவத்தின் பயனாம் புலவர் கம்பர் பெருமானின் பெரும் புகழ்பாட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013ஆம் ஆண்டு ''கம்பராமாயணத்தின் உயரிய கருத்துகளைப் பரப்பும் சிறந்த அறிஞருக்கு ஆண்டுதோறும் கம்பர் விருது வழங்கப்படும்'' என அறிவித்து, அங்ஙனம் வழங்கிக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானின் பெருமையைத் தமிழ்கூறும்

நல்லுலகிற்குப் பறை சாற்றினார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 2017–2018ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கம்பர் மற்றும் இளங்கோவடிகள் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அல்லும் பகலும் அன்னைத் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட சங்க இலக்கியப் புலவர்கள் தொடங்கி, இக்கால இலக்கியப் புலவர்கள் வரை அனைவரையும் பெருமைப்படுத்துவதைத் தமிழ்நாடு அரசு தனது இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறது. அவ்வகையில், ஆண்டுதோறும் மார்ச்சு திங்கள் 24ஆம் நாளினை "கம்பர் திருநாள்" ஆகக் கருதி அன்று சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் சிலைக்கு அருகில் அவரின் திருவுருவப்படம் வைத்து மலர் தூவியும் சிறப்புச் செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிவிப்பிற்கிணங்க சென்னை, பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பர் சிலைக்கு 24.03.2018 அன்று காலை 9.00 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து, மலர்தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**